# <u>திருவள்ளுவர் சுயசரிதைச் சுருக்கம்</u>

<u>பா.கமலக்கண்ணன் (99524 18046)</u>

திருக்குறள், உலகின் பலமொழிகளிலும் மொழி பெயர்ப்பு செய்யப் பெற்றுள்ளது, உலகப் பொதுமறை என்றும் போற்றப் பெறுகிறது. ஆனால், திருவள்ளுவரின் உண்மையான வரலாற்றிற்கு மாறாக ஒரு மாயாஜாலக் கதையே உலவி வருகின்றது.

திருவள்ளுவர் பெயரால் திருக்குறள் மட்டுமல்லாது, கீழ்க்கண்ட 10 நூல்களும் சித்தர் நூல் வரிசையில் அச்சிடப்பெற்றுள்ளன:

1. ஞானவெட்டியான், 1500
2. நவரத்தின சிந்தாமணி, 800
3. நவரத்தின சிந்தாமணி சூத்திரம், 100
4. பஞ்சரத்தினம், 500
5. கற்பம், 300
6. குருநூல், 50
7. வாத சூத்திரம், 16
8. முப்பு சூத்திரம், 30
9. முப்பு, 10
10. நாதாந்த சாரம், 100

ஞான வெட்டியான் என்ற நூலில், திருவள்ளுவர், தாம் அகத்திய முனிவரின் சீடர் என்று கூறியுள்ளார்:

1. பைந்தமிழ்க் குயர்ந்த **அகத்தீசர் வந்து**
   **பலகலையும் எனக்குரைத்துப் பாலித்தார்காண்**

   - ஞானவெட்டியான், 361

2. **குருமுனிதான் எனக்குரைத்த உபதேசப்படி அனைத்தும்**
   **குறித்தேன் இந்நூல்**................

   - ஞானவெட்டியான், 1694

ஞானவெட்டியான் முதலான நூல்களை இயற்றிய திருவள்ளுவர் சித்தர்களின் மரபைச் சேர்ந்தவரே என்பதற்குப் போக முனிவரின் இப்பாடல்கள் சான்று நிற்கின்றன:

1. கொண்டிட்ட **வள்ளுவனார் நூலும் கண்டேன்**

   - போகர் ஏழாயிரம், 2: 995

2. **செங்கமல வள்ளுவனார் சரணம் சொன்னேன்**

   - போகர் ஏழாயிரம், 7: 990

திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரும், அகத்தியரின் சீடராக ஞானவெட்டியான் முதலான நூல்களை இயற்றியவரும் ஒருவரே என்பதற்கு இப்பாடல்கள் சான்று நிற்கின்றன:

1. ஆமேதான் **இரண்டடியாய்ச் சொன்ன வேதம்**

- முப்புசூத்திரம் 30-ல் 25

2. **கேளப்பா ஈரடியால் வேதம் சொன்னேன்**

- வாதசூத்திரம் 16-ல் 2

3. **முன்னமேயான் பாடிவிட்டேன் ஆயிரத்து முன்னூறு**
   **முடித்து வைத்தேன் குறளதுவாய் உலகோர்க்கு**

- ஞானவெட்டியான், 1748

4. **அம்புவி யில்குறள் அடியேன் பாடும் நாளில்**
   **அநேகம்பேர் எனைஎதிர்த்து உரைதான் கேட்க**

- ஞானவெட்டியான், 1649

திருவள்ளுவர், தம்முடைய **இயற்பெயர், சாம்புவமூர்த்தி** என்றும், **தந்தையின் பெயர், சாம்பசதாசிவன்** என்றும் ஞானவெட்டியானில் பதிவு செய்துள்ளார்:

1. ......................................................

**சாம்புவமூர்த்தியும்** நான்காணும்
புத்தியில் அதீதவன் காண் - சிவசிவ
புவனமதில் புகழ் **திருவள்ளுவன்காண்**

- ஞானவெட்டியான், 44

2. **சாம்ப சதாசிவன் தந்தைகாண்** ஆண்டையே

- ஞானவெட்டியான், 571

கற்பம் 300 என்ற நூலில் பக்கம் 8 முதல் 11 வரை, தான் தாயின் வயிற்றில் பத்து மாதங்கள் இருந்தபோது, தாய்பட்ட துயரத்தை, ஞான திருஷ்டியால் உணர்ந்து அற்புதமாக விவரித்துள்ளார். பத்தாவது மாதத்தில் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததை இவ்வாறு பதிவு செய்துள்ளார்:

உற்ற மருத்துவரும் வருமுன்னே
ஊக்கமாய் வலிகண்டு அந்நேரம்
**பெற்றாள் ஒரு பிள்ளையும் - மிகப்**
**பேரான வள்ளுவன் நான்தானே**

- கற்பம் 300, பக்கம் 11

திருவள்ளுவருடைய தந்தையார் பெருஞ்செல்வந்தராக விளங்கிய காரணத்தால், நவரத்தின ஊஞ்சலில் வைத்து தாலாட்டி குழந்தையை வளர்த்தார்:

**நவரத்தின ஊஞ்சல்தனில் எனையே வைத்து**

- ஞானவெட்டியான், 502

திருவள்ளுவர், தாம் பிறந்த ஊர், கரூர் என்று பல பாடல்களில் பதிவு செய்துள்ளார்:

1. ................................................................

**ஆதிக்கருவூர் வளர்திரு நாட்டினில்**
ஓதிய வள்ளுவ சாம்புவனால் உலகாதீதம்
எங்கும் உதித்தவா றாண்டையே

- ஞானவெட்டியான், 570

2. **அத்திபுரம் இலகுகின்ற கருவூர் நாட்டில்**
அறைவீட்டில் குடியிருந்து அமைந்தேன் ஆண்டே

- ஞானவெட்டியான், 192

திருவள்ளுவருக்கு ஐந்து வயது ஆகும் போது அவருடைய பெற்றோர் அவரை வேதியர்களின் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தனர்:

அந்தமுள்ள வயதுமொரு ஐந்து மாச்சு
..............................................................
விந்தையுடன் பிழைக்கு மென்று **பள்ளி தன்னில்**
**வேதியர்கள் வசத்திலே வைத்து** மேலும்

- ஞானவெட்டியான், 514

திருவள்ளுவர், பத்து வயதுக்குள் வேதங்களையும் உபநிஷதங்களையும் கற்றுத் தேறி 16 வயதில் ஞானத்தவம் செய்யத் தொடங்கியதாகக் கூறுகிறார்:

நீதமுடன் பரையருளால் கல்வி கற்று
நேர்மையுடன் **பத்து வயதான பின்பு**
**வேதமுதல் யாவையுமே பார்த்துத் தேறி**
**வேதாந்தத் தாயருளால் வயது ஈரெட்டில்**
**சாதகமாய் யோகமுதல் செய்தறிந்து**
**சகலகலை ஞானகற்பம் கொண்டேன் ஆண்டே**

- கற்பம் 300-ல் பக்கம் 13

திருவள்ளுவர் நெசவுத் தொழில் செய்து பெருஞ் செல்வந்தராய் மனைவி, குழந்தைகள், சுற்றத்தோடும் மாடு கன்றுகளோடும் பெருஞ்செல்வந்தராய் வாழ்ந்து வந்தார்:

1. அறுந்தது நூல் பிணைக்கும் - சிவசிவ
அச்செனும் பாவது கண்ட மட்டும்
**சிறந்தது நூல் பிணைக்கும்** - சிவசிவ
**சித்திரச் சாம்புவன் நான்காணும்**

- ஞானவெட்டியான், 33

2. மண்டலத்தில் யானும் வந்து பிறந்த பின்பு
**மருவு பெண்டு மக்கள் சுற்றம் மாடு கன்றும்**
தன்**கரத்தால் வெகு காசு செம்பொன் காணி**
தரணிதனில் தனம் பெறவும் சார்ந்தேன்

- ஞானவெட்டியான், 656

மனைவியோடு 12 ஆண்டுகள் இல்லறம் நடத்திய பின்னர் இருவரும் அகத்துறவு பூண்டு குருவும் சீடனும் போலும் வாழ்ந்தனர்:

1. பாலமிர்த மூலம் **என்றன் இல்லற வாழ்க்கை**
**பனிரெண்டு வருடமதும் சென்று** மேலும்

- ஞானவெட்டியான், 1806

2. உருவெடுத்து மனையாட்டிகையில் சிக்கி
உபாயமதாய் யான்விலகி உலகத்துள்ளே
**இருவரும் ஒருமனதாய் குருவும் சீடன்**
**இருப்பது போல இல்லமதில் இனிது வாழ்ந்தேனே**

- ஞானவெட்டியான், 358

அகத்திய மாமுனிவர் திருவள்ளுவருக்கு தசதீட்சை அளித்ததோடு நீண்டகாலம் வாழ்வதற்கு, காயசித்தி பெறுமாறு கற்பம் உண்ணச் செய்தார்:

குருமுனியால் தீட்சை பத்தும் கோணாமல் கூர்ந்து மிக
அருள்புரிந்து **காயசித்தி அனுக்கிரகம் பெற்றேனே.**

- ஞானவெட்டியான், 976

தம்முடைய 40-ஆவது வயதில் ஞானத்தவம் முழுமையுறப் பெற்று அதற்கு மேல் 25 ஆண்டுகள் பற்பல நூல்களை உருவாக்கியதாகப் பதிவு செய்துள்ளார்:

மாறுகலை **நாற்பதுக்குள் வயது காலம்**
**வரும்படியாய் மெய்ஞ்ஞானம் வாய்த்ததாலும்**
**வேறு இருபத்தஞ்சிலும் புவியில் தானும்**
**வெகு விசித நூல்களது விதித்தேன் காணும்**

- ஞானவெட்டியான், 1650

வேதங்கள், உபநிஷதங்களை விளக்கி, திருவள்ளுவர் உரையாற்றுவதைக் கேட்ட வேதியர்களும் சாஸ்திரிகளும் அவரைத் துதித்து நவரத்தின சங்கப்பலகையில் அமர்த்தி, பல விருதுகளை வழங்கினர். பூணூல், வெண்கொற்றக் குடை, வெண்சாமரம், பொன்விசிறி மரகத குண்டல கவசம் தரித்து பெரும் சிறப்போடு திருவள்ளுவர் விளங்கினார்:

1. சாதியில் உயர்ந்தவன் காண் - **நவரத்ன**
**சங்கப் பலகையின் மேலிருந்தவன்காண்**
**வேதியர் சாஸ்திரியர் - துதி செய்யும்**
**விருது பெற்றிடும் வீரசாம்புவன்காண்**

- ஞானவெட்டியான், 41

2. **பூணநூல் தரித்துக் கொள்வோம்** - சிவசிவ
பொறியும் ஐம்புலனையும் தொழுதுகொள்வோம்
வேணவிருதுகளும் - விசிதமாய்
**வெண்குடை வெண்சாமரமும் பிடித்துக் கொள்வோம்**
**வானவர் முனிவர் தொழும் - பொன்விசிறி**
**மரகத குண்டலத்தின் கவசங்களும்**
ஞானப் பிரகாச ஒளி - திவ்யரச
நாதவிந்தர்ச்சனைகளில் நாம் துதிசெய்வோம்

- ஞானவெட்டியான், 40

அகத்திய முனிவரின் ஆணைப்படி திருவள்ளுவர் புறத்துறவு பூண்டு பற்பல தலங்களுக்கும் சென்றார். முதலில் அவர் தனுஷ்கோடிக்குச் சென்று, அங்கே கடுந்தவம் புரிந்தார்:

சித்திர **தனுக்கோட்டி எனும் செங்கநதி கங்கைவளர்**
**பத்திரமா யானிருந்தே** ..........................................

- ஞானவெட்டியான், 205

அதன்பிறகு கரூர் காட்டில் குடில் அமைத்து சிலகாலம் தங்கியிருந்து, பின்னர் மயிலாப்பூர் (மயிலார்புரம்) சென்றார்:

........................................................................ கருவூர்
காட்டை விட்டேன் சிறுவீட்டை விட்டேன்
**வடமயிலார் புரமும்** மதி நதியின்
வாசல் விட்டேன் ..........................................

- ஞானவெட்டியான், 405

குறிப்பு: திருவள்ளுவர் தமது 70 - 80 வயதில் மயிலாப்பூர் சென்றிருக்கலாமென்று தெரிகிறது. இதைவைத்தே ஆதி-பகவன் கட்டுக் கதை தோன்றியிருக்கும் போலும்!

பின்னர், நடனமிடும் கபாலீஸ்வரர் பொற்கமலமும் விட்டு நீங்கி, அலைகடல் ஓரமுள்ள திருஒற்றியூர் சென்று சில ஆண்டுகள் தங்கினார். பின்னர் அதை விடுத்து, திருப்பதி மலையில் திருமால் ஆலயத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்து பின்னர் அதைவிடுத்து, அந்த மலையிலேயே பாவ நாசத்திற்கருகில் ஒரு குகையில் பல்லாண்டு காலம் சமாதியில் இருந்தார். அங்கு கொங்கணச்சித்தர் அவருடைய சீடராகி குகையைக் காத்து வந்தார்:

நடனபொற் கமலம் விட்டேன் - அம்பரவெளி
நயனவிழி மதுர நாடும் விட்டேன்
அடலலைக் கடலோரம் - **அலைகடலின்**
அலையும் விட்டேன் **திருமலையும்**
வடதிசை நாடும் விட்டேன் - கனகரத்ன
மாலும் விட்டேன் **இருகாலும் விட்டேன்**
**திடமெனும் உடலை விட்டேன்** - சித்திரகூடம்
சிங்கார செங்கநதி கங்கை விட்டேன்.
- ஞானவெட்டியான், 406

பல ஆண்டுகள் சமாதியிலிருந்த குகையை விட்டு வெளியேறி, திருவானைக்காவல் ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தில் தங்கியிருந்தார். அது முதல் மௌனவிரதம் மேற்கொண்டார்.

குறிப்பு: சித்தர்கள் தாம் விரும்பும்போது சமாதிக்குச் சென்று பல்லாண்டுகள் கழித்து வெளியே வந்து சீடர்களுக்கு உபதேசம் செய்து மீண்டும் பலமுறை முன்போல் சமாதிக்குச் சென்று வெளியே வரும் இயல்பினர்.

பின்னர், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் பல ஆண்டுகளும், தில்லைச் சிதம்பரத்தில், பல ஆண்டுகளும், ஆவுடையார் கோயில், தஞ்சாவூர், திருவையாறு, ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், கொடுமுடி, திருவாட்போக்கி ஆகிய தலங்களில் பற்பல ஆண்டுகள் தங்கியிருந்தார்:

1. அலகைதன் வீதியிலே - ஜலமதனின்
அணியும் விட்டேன் எந்தன் தொனியும் விட்டேன்
மலைதலை அகழ்த்தி வைக்கும் - இந்திர பீட
வாசல் விட்டேன் ஏமகூடம் விட்டேன்
உலகெலாம் நிறைந்து நின்ற - நடுவணையின்
ஊரைவிட்டேன் அதிபாரம் விட்டேன்

சிலகேணி மேடை விட்டேன் - தேவர்கள் வாழும்
தில்லை அனந்தபுரத் தெல்லை விட்டேன்
- ஞானவெட்டியான், 407

2. திருப்பெருந் துறையை விட்டேன் - புஷ்கரணி
தீர்த்தம் விட்டேன் தெய்வ நதியும் விட்டேன்
இருகரை நாடும் விட்டேன் - மண்டபத்தடி
ஈசனிருக்கும் கொடுமுடியும் விட்டேன்
மருமலர் கனக ரத்தின - அம்பிகை பதம்
வணங்கியே மலரடி கமலம் விட்டேன்
உருவருளும் உறவும் விட்டேன் - உக்கிரவிசை
உலகுவிட்டேன் மேருதுறக்கம் விட்டேன்
- ஞானவெட்டியான், 409

இறுதியாக, அலையற்ற அக்கினி தீர்த்தம் என்னும் அமிர்த நதி கலந்துள்ள இராமேஸ்வரம் வந்து பலகாலம் தங்கினார். பின்னர், உலகவாழ்க்கை என்னும் நிலையாத நதியை விட்டு நீந்திக் கரையேறி விட்டேன்; ஐம்புலனையும் ஒடுக்கி விட்டேன்; தாம் புறப்பட்ட தனுஷ்கோடிக்குச் சென்று உடல்கூறை விட்டேன் (நிரந்தரமான சமாதிக்குச் செல்கின்றேன்) என்று பதிவு செய்துள்ளார்:

அலையாப் பதியும் விட்டேன் - அமிர்த நதி
அது கடந்தே அக்கினி ஆற்றை விட்டேன்
துலையாக் கடலும் விட்டேன் - சுகதுக்க
தூறும் விட்டேன் உடல்கூறும் விட்டேன்
நிலையா நதியும் விட்டேன் - கரைஏறி
நீஞ்சி விட்டேன் கலை பாஞ்சி விட்டேன்
ஜலசங்க நதியும் விட்டேன் - ஜலநதியின்
சார்பும் விட்டேன் கரைஏறி விட்டேன்.
- ஞானவெட்டியான் 410

இறுதியாக திருவள்ளுவர் ஒரு முக்கிய செய்தியைக் கூறுகிறார்:

வாலை அபிராமியெனும் கமலம் தன்னில்
மலரடியைப் பணிந்து மதி அமிர்தமுண்டு
பாலமிர்த மூலமென்றன் இல்லற வாழ்க்கை
**பனிரெண்டு வருஷமதும் சென்று மேலும்**
ஆலவிடமுண்ட சிவனருளால் ஆண்டே
**ஆயிரத்து ஐநூற்று அறுபத் தொன்றும்**

சீலமருள் ஞானவெட்டி நிறைந்த சோதி
சிவசமயம் தழைத்தருள்வாய் சித்து முற்றும்
- ஞானவெட்டியான் 1806

பொருள்:

என்னுடைய பிரம்மரந்திரத்தினுள்ளே துரியாதீதத்தில் தாமரை மலரில் விளங்கும் வாலை அபிராமியின் மலரடியை ஞானத்தவத்தால் பணிந்து, மதி அமிர்தமுண்டு, என்னுடைய இல்வாழ்க்கை 12 ஆண்டுகள் கடந்த பின்னர் நடராஜப் பெருமானின் திருவருளால் மேலும் 1561 ஆண்டுகளாக நான் வாழ்ந்து மனிதன் முழுமையான சித்தி அடைவதற்கான வழிமுறைகளை சைவ சமயம் தழைக்க ஞானவெட்டியான் என்ற நூலில் கூறியுள்ளேன்; முற்றும்.

அக்கால வழக்கப்படி திருவள்ளுவருக்கு 18 வயதில் திருமணம் நடைபெற்றதாகக் கருதினால் 18+12+1561 = 1591 ஆவது வயதில் அவர் இப்பாடலை எழுதினார் என்று தெரிகிறது. இந்த செய்தி இக்கால மக்களுக்கு நம்ப முடியாததாக இருக்கலாம். ஆனால் 1000 ஆண்டுகளுக்கு மேல் வாழும் பல சித்தர்களைப் பற்றி போகர் ஏழாயிரம் என்ற நூலில் ஆதாரம் உள்ளது. இரண்டு சான்றுகளை இங்கு காண்போம்:

1. பாரேதான் கமலமுனி வயதே தென்றால்
பாலகனே சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
நேரேதான் வயததுவும் **நாலாயிரந்தான்**
நேர்மையுடன் **முன்னூற்று சொச்சமப்பா**
- போகர் ஏழாயிரம் 6: 841

2. புரிகுவார் வயதினுடை மார்க்கம் தன்னை
புகலுவேன் **காலாங்கி நாதருக்கு**
சரியுடனே **மூவாயிரம் சொச்சமப்பா.**
- போகர் ஏழாயிரம் 6: 743

இப்பாடல்களிலிருந்து கமலமுனிவர் 4300 வயதுக்கு மேலும், காலாங்கி நாதர் மூவாயிரம் வயதுக்கு மேலும் வாழ்ந்து வந்தனர் என்று அறிகிறோம்.

இந்த ஆய்விலிருந்து, திருவள்ளுவர் ஒரு தமிழ்ப்புலவர் மட்டுமல்ல; சித்தர்கள் வழிவந்த ஒரு மாபெரும் ஞானி என்று உலகம் உணருமாக.

# வானதி வழங்கும்
# ஆசிரியரின் நூல்கள்

1. ஞானக்கனல் - 1989
2. குணங்குடியாரின் ஞானவழி - 1993
3. சித்தர் நூல்களில் அகத்தியர் திருவள்ளுவர் வரலாறு - 1996
4. சித்தர் தத்துவம் (தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது) - 2000
5. இந்து, கிறிஸ்துவம், இஸ்லாம் ஒருமைப்பாடு - 1998
6. திருப்புகழ் காட்டும் முத்தி நெறி - 1997
7. வேதம் விளக்கும் தேவ இரகசியம் - 1997
8. சதுரகிரியில் கோரக்க சித்தர் - 2006
9. சித்தர் உருவில் சிவபெருமான் - 2007
10. அருட்பெருஞ்சோதி ஞானச் சித்தர் - 2008
11. அருட்பெருஞ்சோதி அகவல் ஞான விளக்கம் - 2009
12. திருஅருட்பா ஞானவிளக்கம் - 2010
    (முதல் திருமுறை பாடல்களுடன்)
13. திருஅருட்பா ஞானவிளக்கம் - 2011
    (இரண்டாம் திருமுறை பாடல்களுடன்)
14. திருஅருட்பா ஞானவிளக்கம் - 2011
    (3,4,5 ஆம் திருமுறை பாடல்களுடன்)
15. திருஅருட்பா ஞானவிளக்கம் - 2012
    (ஆறாம் திருமுறை பாடல்களுடன்)
16. இறை அருளாளர் இராமலிங்கர் வாழ்வும் வாக்கும் - 2013
17. **Footsteps of Saint Ramalingam** - 2014
18. அவ்வைக்குறள் ஞானவிளக்கம் - 2014
19. விநாயகர் அகவல் ஞானவிளக்கம் - 2014
20. சிலப்பதிகாரப் பொற்கொல்லன் - வரலாற்றுச் சான்றுகள் - 2015
21. திருவாசகத்தில் முச்சுடர் ஞானவிளக்கம் - 2015
22. வேத விளக்கமே மூவர் தேவாரம் - 2015
23. திருஅருட்பா ஆறாம் திருமுறை உட்பொருள் திரட்டு - 2015
24. திருஅருட்பா முதல் ஐந்து திருமுறைகள் உட்பொருள் திரட்டு - 2015
25. அருட்பெருஞ்சோதி அகவல் உட்பொருள் திரட்டு - 2016